<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 151/2025</u>

LW : 3 PW :2

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி பெறப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இளங்கோவன் | த / பெ. | திரு. கேசவன் |
| வசிப்பிடம் | | தஞ்சாவூர் | தாலுக்கா | தஞ்சாவூர் |
| தொழில் | : | துணை பதிவாளர் (ஓய்வு) | வயது | 79 |

LW : 3 PW :2

1, 2, 3 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>25.09.2025</u>

<u>முதல் விசாரணை</u>

தற்சமயம் துணைபதிவாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். ஓய்வுபெறுவதற்கு முன்பாக மண்டல துணை பதிவாளர், வீட்டுவசதி கூட்டுறவு சங்கத்தில் 30.06.2002 லிருந்து பணிபுரிந்து மாறுதல் செய்யப்பட்டேன். எனது கட்டுப்பாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு வீட்டுவசதிசங்கங்களும் இருந்தது.

2) திருத்துறைப்பூண்டி வட்டம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் **12.06.2000 ல் பிரிவு 81 விசாரணை அறிக்கையை பெற்று அதனை ஆய்வுசெய்து திருந்திய அறிக்கை கோரி விசாரணை அதிகாரிக்கு திருப்பு அனுப்பினேன். அந்த அறிக்கை அதசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **ந.க.எண்**

**2666/99/ச.ப. /18.12.2001 திருந்திய அறிக்கை பிரிவு 81 விசாரணை அதிகாரியிடம் கோரியுள்ளேன். அது அதசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன்பிறகு பிரிவு 81 ன்கீழான திருந்திய அறிக்கை என்னால் பெறப்பட்டு பதிவாளர், வீட்டுவசதி, சென்னை அவர்களின் அறிவுரைகளின்படி **திருந்திய அறிக்கை விசாரணை அதிகாரியிடமிருந்து 02.05.2002 ல் என்னால் பெறப்பட்டது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அறிக்கைதான் அது. அது அதசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவ்வறிக்கையை ஆய்வு செய்துகொண்டிருக்கும்போது மாறுதல் காரணமாக 30.06.2002 ல் விடுவிக்கப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3) முதல் முதலில் பிரிவு 81 ன் கீழான கூட்டுறவு துறை விசாரணை துவங்குவதற்கு உத்தரவிடப்பட்ட நாள் 03.09.1999. முதன்முதலில் கூட்டுறவு துறை விசாரணை அதிகாரிக்கு விசாரணையை 90 நாட்களுக்குள் முடிக்கவேண்டும் என உத்தரவிடுவோம் என்றால் சரிதான். 90 நாட்களுக்குள் முடிக்கமுடியவில்லை என்றால் மேலும் 3 மாதகாலம் காலநீடிப்பு கேட்டு விண்ணப்பிப்பார்கள் என்றால் சரிதான். ஆக மொத்தம் விசாரணை தொடங்கிய காலத்திலிருந்து 6 மாதகாலத்திற்கும் அந்த விசாரணையை முடிக்கவேண்டும் என்றால் சரிதான்.

4) 31.05.2000 ல் முதல் பிரிவு 81 விசாரணை முடிக்கப்பட்டதாக கையொப்பமிட்டுவிட்டு 12.06.2000 ல்தான் என்னிடம் வந்துள்ளது என்றால் சரிதான். அதன்படி முதல் விசாரணை முடித்து தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை 6 மாதத்திற்கு பிறகுதான் வந்துள்ளது என்றால் சரிதான். தமிழ்நாடு கூட்டுறவு

சட்டத்தின்படி திருந்திய அறிக்கை கோருவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

5) 12.06.2000 ல் நான் பெற்றுக்கொண்ட முதல் விசாரணை அறிக்கையிலிருந்து 18 மாதம் காலதாமதமாக 18.12.2001 ல் திருந்திய அறிக்கை கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். திருந்திய அறிக்கையினை 1 வார காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என காலஅவகாசம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதன்படி 25.12.2001 ற்குள் என்னிடம் திருந்திய அறிக்கையை கொடுத்திருக்கவேண்டும் என்றால் சரிதான். திருந்திய அறிக்கை என்னிடம் 02.05.2002 ல்தான் என்னிடம் வந்துள்ளது என்றால் சரிதான்.

6) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வகையில் நான் என்னுடைய பணியினை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த பிரிவு 81 விசாரணை அறிக்கை சட்டப்படி ஏற்கத்தகுந்த தல்ல என்றால் சரியல்ல.

**3 ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

7) பொதுவாக துணை பதிவாளர் பிரிவு 81 விசாரணைக்கு உத்தரவிட்டு அந்த அறிக்கையை பெற்றபின் அந்த அறிக்கையில் குறைபாடுகள் இருந்தாலோ கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டால் விசாரணை அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டு விளக்கமோ, குறைபாடு நிவர்த்திசெய்யப்பட்ட விரிவான அறிக்கையோ திரும்பகோரலாம் என்றால் சரிதான். 12.06.2000 அன்று நான்பெற்ற விசாரணை அறிக்கையான அதசாஆ 2 ல் குறைபாடுகள் இருந்ததாலும் கூடுதல் விவரங்கள் எனக்கு தேவைப்பட்டதாலும் அசாஆ 3 ன் மூலம் 5 குறைபாடுகளை சுட்டிக்காட்டியும் மேலும் கூடுதல் விவரங்களை

கேட்டும் விசாரணை அதிகாரிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

8) விசாரணை அதிகாரி குறைபாடுகளை நிவர்த்தி செய்து 1 முதல் 13 மோசடி இனங்களை முழுமையாக விசாரித்து குறைபாடுகளை நீக்கிதான் அதசாஆ 4 ஐ மீண்டும் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வகையில் அதசாஆ 2 குறைபாடுடைய அறிக்கை என்றால் சரிதான். எனக்கு பின்னாள் வந்த அதிகாரி காவல்துறையினருக்கு அதசாஆ 4 விசாரணை அறிக்கையைதான் புகாருடன் சேர்த்து அனுப்பியிருக்கவேண்டும் என்றால் சரிதான்.

9) நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது அதசாஆ 4 திருத்திய அறிக்கை என்றால் சரிதான். அதில் பக்கம் 157 ல் தனிஅலுவலர் முருகானந்தம் என்பவருக்கு செயலாளர் பொறுப்பேற்க தீர்மானம் நிறைவேற்றுள்ளார் அந்த தீர்மானம் ஏட்டளவில் இருந்துள்ளதாக விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

10) பக்கம் 158 ல் செயலாளர் தொடர்ந்து பணியில் இருக்கும்போதே தகுந்த காரணத்தை தெரிவிக்காமல் சங்க எழுத்தர்களை செயலாளர் பொறுப்பேற்க தீர்மானம் நிறைவேற்றுள்ளார், செயலாளர் பணியில் இருக்கும்போது வேறு பணியாளர்களுக்கு தகுந்த காரணமில்லாமல் செயலாளர் பதவி வழங்குவது சங்க விதிகளுக்கு முரண்பாடானதாகும். சங்க செயல் அலுவலர் எழுத்தினாலும் உணர்வினாலும் செயல்முறைபடுத்தப்பட்ட எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என விசாரணை அதிகாரி தெரிவித்திருக்கிறார் என்றால் சரிதான்.

C.C. No. 151/2025

11) அதசாஆ 4 திருந்திய குறைபாடில்லாத விசாரணை அறிக்கையில் 3 வது எதிரியாக சொல்லப்படும் முருகானந்தம் பெயரை விசாரணை அதிகாரி நீக்கரவு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றால் சரிதான்.

12) உண்மையாக விசாரணை அறிக்கையின்படி இவ்வழக்கை பதிவுசெய்யாமல் 3 வது எதிரி காவல்துறையினரால் வேண்டுமென்றே எதிரியாக குறிப்பிட்டு அவர் அலைகழிக்கப்பட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.09.25 16:06:40 +0530

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 151/2025

Additional Witness 1 / PW :1

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி பெறப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செந்தில்நாதன் | த / பெ. | திரு. வடிவேல் |
| வசிப்பிடம் | | கோயம்புத்தூர் | தாலுக்கா | |
| தொழில் | : | துணை பதிவாளர் | வயது | 53 |

Additional Witness 1 / PW :1

1 , 2, 3 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

25.09.2025

முதல் விசாரணை

இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 - N. கலியமூர்த்தி, மண்டல துணை பதிவாளர் இறந்துவிட்டதால் என்னை விசாரிக்க நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி அரசு தரப்பில் சாட்சி 1 ஆக சத்தியபிரமாணத்தின்பேரில் சாட்சியமளிக்கிறேன்.

நான் கோயம்புத்தூரில் வசித்து சேலத்தில் துணை பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். இறந்துவிட்ட மண்டல துணைபதிவாளர் கலியமூர்த்தி என்பவரை நான் நேரில் பார்த்ததில்லை ஆவணங்களின் மூலம் தெரிந்துகொண்டேன்.

தஞ்சாவூர் மண்டல வீட்டுவசதி சங்கத்தில் திரு. கலியமூர்த்தி துணை பதிவாளராக இருந்தபோது திருத்துறைப்பூண்டி வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் சங்க ஆவணங்களில் முறைகேடு நடந்தது சம்பந்தமாக அப்போதைய செயலாளர் தனி அலுவலர், நிதி கையாடல் செய்ததற்காக பிரிவு 81 விசாரணை அதிகாரியை நியமனம் செய்துள்ளார். பிரிவு 81 விசாரணை அதிகாரி கொடுத்த விசாரணை அறிக்கையின் பேரில் திருவாரூர் வணிக குற்றப்புலனாய்வு பிரிவில் குற்ற புகார் கொடுத்துள்ளார்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் இறந்துவிட்ட திரு.கலியமூர்த்தி மண்டல பதிவாளர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. அது **அதசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரின்படி கையாடல் நடந்துள்ளது தெரியவருகிறது என கலியமூர்த்தி அவர்கள் போலிசாரிடம் புகார் கொடுத்துள்ளார்.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

என்னுடைய பணியின் பெரும்பாலான நாட்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும்தான் பணியாற்றியுள்ளேன். கலியமூரத்திக்கும் எனக்கும் எந்த பரிட்சயமும் கிடையாது. கலியமூர்த்தியுடன் நான் எந்த சந்தர்பத்திலும் சேர்ந்து பணியாற்றவில்லை. கலியமூர்த்தியின் கையொப்பத்தை நான் பார்த்ததில்லை என்றால் கோப்பில் பார்த்துள்ளேன். நான் கலியமூர்த்தியின் கையொப்பத்தை கோப்புகளில் பார்த்ததாக சொல்வது இந்த வழக்கு கோப்புகளில்தான் என்றால் சரிதான். இந்த வழக்கு கோப்புகளை 1 வார காலத்திற்கு முன்புதான் பார்த்தேன் என்றால் சரிதான்.

கூட்டுறவு சங்க சட்டத்தின்படி பிரிவு 81 ன்படியான விசாரணை 6 மாதத்திற்கு மேல் நடத்தப்படக்கூடாது என்றால் சரிதான். கூட்டுறவு சங்க

அலுவலர்கள் எப்படி பணிபுரியவேண்டும் என அவர்களுக்கான Tamilnadu Co-Operative Department Manual விதிகள் குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். தனிஅலுவலர்கள் கூடுதலாக பொறுப்பு பார்க்கும்போது நடக்கும் கையாடல்களுக்கு அவர்கள் மேற்பார்வைக்கு மட்டுமே பொறுப்பாளிகள் என்பதால் அவர்கள் மீது துறைசார்ந்த நடவடிக்கையை தவிர்க்கவேண்டும் என்று கையேடில் உள்ளது என்றால் சம்பளம் வாங்காமல் கூடுதல் பொறுப்பு பார்க்கும்போதுதான் அந்த விதி பொருந்தும்.

1ம் எதிரியானவர் திருவாரூர் கூட்டுறவு சார் பதிவாளராகதான் இருந்தார் என்றாலும் அவருக்கு மேலும் தனி அலுவலராக பொறுப்பு கொடுத்து சம்பளம் இல்லாமல் திருவாரூர் ஊரக கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், திருத்துறைப்பூண்டி ஊரக கூட்டறவு வீட்டுவசதி சங்கம், பிரதாபசிம்மபுரம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், தஞ்சாவூர், மற்றும் சிவாஜிபுரம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், தஞ்சாவூர், சீர்காழி ஊராக கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், இவற்றில் எல்லாம் 30.08.1995 லிருந்து கூடுதல் பொறுப்பாக 16.04.1996 வரை அரசால் நியமிக்கப்பட்டிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

கலியமூர்த்தியின் இந்த புகாரானது 2 ½ ஆண்டுகள் காலதாமதமாக காவல்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டதற்கு எந்த விளக்கமும் புகார் மனுவில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புகார்மனுவில் 1 முதல் 13 இனங்களில் மோசடி நடந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் மோசடி இனம் 5 மற்றும் 13 ல் மட்டுமே 3வது எதிரியான முருகானந்தத்தின்பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

புகாரில் பொருள்பகுதியில் ஒரே ஒரு 12.06.2000 ம் தேதியிட்ட பிரிவு 81 விசாரணை அறிக்கையைதான் அனுப்பியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்திய பிரிவு 81 ன் கீழான 30.04.2002 தேதியிட்ட அறிக்கையை அனுப்பியதாக புகாரில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த புகார் சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.09.25 16:06:56 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.